சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**I.A No. 3/2026 in O.S.No.81/2024**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் –சாட்சி–4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரோசாலி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ம் நாள் சாட்சியம்.

---

**மனுதாரர் வாக்குமூலம்**

நான் இந்த மனுவில் 7 ம் எதிர்மனுதாரர் ஆவேன். வாதி நடராஜ் அசல் வழக்கு எண். 81/2024 வழக்கினை பிரதிவாதிகளாகிய எங்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காக தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் நாங்கள் மனுதாரருடன் சமரசமாக பேசி முடித்துக் கொண்டுள்ளோம். மேற்படி சமரசத்தில் எனக்கு எந்த சொத்தும் வேண்டாம் என்று நான் ஒப்புக்கொடுத்துள்ளேன். தரப்பினர்களாகிய நாங்கள் தாக்கல் செய்துள்ள சமரச மனுவினை அனுமதித்து சமரசம் மனுவில் கண்டுள்ள ஷரத்துக்களின் படியும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின் படியும் தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.04.01 18:58:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.